# பணிநிறைவு வாழ்த்து!

திரு. **எஸ். வெங்கடேசன்,**
கண்காணிப்பாளர், சுங்க இல்லம்.



நாள்: 31-03-2023

சுங்கத்துப் படிகளை நான் சுற்றி வரும்போது,
அங்கங்கே சிலரை அறிந்த நிலையுண்டு!
எங்களின் பணியினூடே இடையறாது ஓடிட,
அங்கே சிலருடன் இயைதலும் தானுண்டு!

அன்பினால் புன்னகைத்தல் அடுத்து உரையாடல்,
என்பதுவாய் பலருடனே இணைந்த நிலையுண்டு!
அன்றங்கே ஆட்சியரை (ஆணையர்) அனுகும் நிலையுண்டு!
என்பதனால் நேர்முக உதவியாளர் நெருக்கம் வரும்!

அப்படியோர் நிலைகொண்டு அனுகிய **வெங்கடேசன்,**
எப்போதும் காணுங்கால் இதழ்கடையில் புன்னகைப்பார்!
அப்படியே தொடருங்கால் அருந்தமிழும் இணைத்ததுவே!
இப்படியும் நிகழ்ந்துவந்து இன்றந்த **புலனத்தில்**,

தப்பாமல் கூறுவோம் காலையிலே தனிவணக்கம்!
அப்போதும் பண்டிகைகள் அடுத்தடுத்து வந்துசூட,
எப்போதும் அவர்நினைவு எழுந்து வருவதுண்டு!
இப்போது அவருக்கு இனியதாய் **பணிநிறைவு!**

அடுத்ததாய்க் களம்தேடு ஆன்ற நிலையதுவாம்!
தொடுத்த நிலைமாறி புதியதாய் நாள் முறைகள்!
எடுத்து வைத்தே இனியதாய்த் தொடர்ந்திடுங்கள்!
விடுத்த சிந்தையதை விழுதாக்க முயன்றிடுங்கள்!

வரும்நாட்கள் நமதென்று நலமோடு நினைத்திடுக!
பெரும்துன்பம் பிணியின்றி பெருமையுடன் வாழ்ந்திடுக!
உருவாகும் புதுக்கோலம் உன்னதக் கனியாக,
தருவாக மனந்தன்னை தகைவுடன் செய்திடுக!

தடையின்றி தமிழுள்ளம் தானழைத்து நிலைகொள்ள,
விடைகூறும் அலுவல்பணி பொன்னாளில் வாழ்த்துகிறேன்!
மடையறியா வெள்ளம்போல் மகிழ்ந்தே வாழ்ந்திடுக!
தடையறாது பணிசெய்த நாற்பதாண்டு தீகைப்பூட்டும்!



தங்கமென மனம் கூடி தன்கடமை தான் முடித்து,
எங்கும் காணா இன்பத்தை **வெங்கடேசன்** தனக்கு,
எங்கும்நிறை இறையருளே எந்நாளும் வழங்கட்டும்!
தங்கும்மன இன்பத்தால் தகைவுடன் வாழ்த்துகிறேன்!
அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி, சுங்க இல்லம், சென்னை.
30-03-2023